# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

## நிறுத்திவைத்தல் வரியை கழித்து அனுப்பிவைப்பவர்களுக்கான அறிவித்தல்

2006 ஆம் ஆண்டின் 10 அம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 153, 155 மற்றும் 160 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக –

1. ஏதேனும் சேவையொன்றை (ஊழியம் தவிர்ந்த) பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு,
2. தரகுப்பணம், தரகு கட்டணம் அல்லது அதற்கு சமனான கொடுப்பனவு,
3. கேள்விப்பத்திர ஒப்பந்தம் அல்லது விலைமனுக் கோரல்கள் (Quotations) மூலம் வருமான அல்லது மூலதனத் தன்மைக் கொண்ட ஏதேனும் பண்டமொன்றை பெற்றுக் கொள்வதற்கான கொடுப்பனவு,
4. கட்டிட வாடகை அல்லது வேத்துரிமை, ஆண்டுத்தொகை மற்றும் முகாமைத்துவ கட்டணங்களை செலுத்துதல்,

என்பனவற்றின் மீது நிறுத்திவைத்தல் வரியை கழிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு கழிக்கப்பட்ட வரித்தொகையை குறிப்பிட்ட மாதத்துக்கு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணக்கிற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேற்கூறியவாறு வரிகளை நிறுத்திவைத்தல் மற்றும் அதனை திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் போன்றவற்றிற்கு கொடுப்பனவுகளை அனுமதிக்கும் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களே பொறுப்பாவார்கள் என உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 154, 156 மற்றும் 161 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 142(1) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு கழிக்கப்பட்ட வரிகள் (ஏற்கனவே கழிப்பனவு செய்யப்பட்டதும் நிறுத்திவைக்கப்பட்டதுமான வரி உள்ளடங்களாக),

- மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 014100110110428 இலக்க கணக்கிற்கு வைப்புச் செய்யப்படுதல் வேண்டும். அல்லது,
- ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட காசோலைகளை கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்கள கட்டிடத்தின் 1 ஆம் மாடியிலுள்ள நிறுத்திவைத்தல் வரி (விஷேட அறவீடுகள்) கிளைக்கு எவ்வித தாமதமுமின்றி அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலும், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 151, 156(3) மற்றும் 161(2) ஆம் பிரிவுகளின் கீழ் பதிவுசெய்து கொள்ளாத அல்லது மேற்குறிப்பிட்ட ஏதேனும் பிரிவுகளுக்கமைவாக ஏதேனும் விபரத் திரட்டினை (மாத அட்டவணைகள் மற்றும் பணம் செலுத்தும் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்குத் தவறும் எவரேனும் ஆளொருவர், ஏதேனுமொரு கம்பனி, அரச நிறுவனம் மற்றும் ஆட்கள் குழுவுக்கு பட்சத்தில் ஆணையாளர் நாயகத்தினால் ரூபா 50,000/- இற்கு மேற்படாத தண்டம் விதிக்கப்படும் என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்காக தயவுசெய்து பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.**

| | |
|---|---|
| நிறுத்திவைத்தல் வரிக்கிளை | - 011-3009020, 011-3009449, 011-3009459 |
| வரி செலுத்துநர் சேவைப்பிரிவு | - 011-3009027, 011-3009040, 011-3009018 |
| செயலகக் கிளை | - 011-3009262, 011-3009248 011-3009307 |

## உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

INLAND REVENUE SRI LANKA

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக